# சங்கத் தமிழ் இலக்கியத்தில் யக்ஷிணி, அணங்குகள்

By London swaminthan Post No.798        Date:23 January 2014.

மஹாபாரதத்தில் வரும் 'யக்ஷப் ப்ரஸ்னம்' ( யட்சனின் கேள்விகள்) மிகவும் புகழ் பெற்ற ஒரு சம்பவம். நூற்றுக்கும் மேலான கேள்விகளுக்கு தருமன் அளித்த பதில்களால் திருப்தி அடைந்த யக்ஷன் மற்ற சகோதரர்களை உயிர்ப்பிக்கிறான். இதை விவரமாக மூன்று கட்டுரைகளில் கொடுத்து விட்டேன். இதே போல சிலப்பதிகாரத்தில் வரும் பூதங்கள், கேள்விகள்,தமிழ் இலக்கியத்தில் பேய்கள் பற்றியும் எழுதிவிட்டேன். அணங்குகள் பற்றி 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் என்ன நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்று இன்று எழுதுகிறேன்.

## அணங்குகள் யாவர்?

வடமொழி இலக்கியத்தில் ஆண் யக்ஷர்களையும், பெண் யக்ஷிணிகளையும் காண்கிறோம் ஆனால் தமிழில் பெரும்பாலும் பெண் வடிவத்தில் உள்ள அணங்குகளையே காண்கிறோம். இது மேலை நாட்டுப் (ஐரோப்பிய) பண்பாடுகளில் காணப்படும் மரபு: ஆரிய திராவிடக் கொள்கைகள் தவறு என்பதற்கு இதையும் சான்றாகக் கொள்ளலாம். மேலை நாட்டு வழக்கங்களை ஆரியரோடு ஒப்பிட்டு எல்லோரையும் குழப்பிவரும் ஒரு கோஷ்டிக்கு இது ஒரு புதிர்.

அணங்குகள் பற்றி சங்க காலப் பாடல்களில் நூற்றுக்கும் மேலான குறிப்புகள் இருப்பதால் அத்தனையும் எழுத இடமிருக்காது. பொதுவான விஷயங்களை முதலில் பார்ப்போம்.

ஆறு, குளம், ஏரி, கடல், கண்மாய் முதலிய நீர்நிலைகள், மலை, காடு தோப்பு, துறவு, மரம் முச்சந்திப்பு, தெய்வம் உறையும் மேடைகள் யானையின் மத்தகம், கோட்டைச் சுவர்கள், முரசு,பெண்களின் மார்பகம்

முதலியவற்றில் அணங்குகள் உறைவதாக தமிழர்கள் நம்பினர். சுருக்கமாகச் சொன்னால் 2000 ஆண்டுகளுக்கு முன் உலகில் எல்லா கலாசரத்திலும் இருந்த "மூட நம்பிக்கைகள்" தமிழ் சமுதாயத்திலும் இருந்தன. சில "பகுத்தறிவுப் பகலவன்களும் திராவிடங்களும்" சொல்லுவதை நம்பாமல் நேரடியாக தமிழ் இலக்கியத்தைப் படிப்பவர்களுக்குத் தெளிவு பிறக்கும்.

அணங்குகளை தெய்வ மகளிர் (சுராங்கனி) என்றும் பிறருக்கு வருத்தத்தை ஏற்படுத்துவோர் என்றும் சங்கப் புலவர்கள் வருணிக்கின்றனர். கண்டவரை மயக்கும் மோகினி போன்றோர் அவர்கள்.

சங்க காலத்துக்குப் பின்னர் வந்த திருவள்ளுவர் துன்புறுத்தல் என்ற பொருளில் 'அணங்குறுத்தல்' என்ற சொல்லைக் கூடப் பயன்படுத்துவார் (அதிகாரத் தலைப்பு 109). காம நோயால் உயிர்கொள்ளும் தெய்வப் பெண் என்பதற்கும் (918), தெய்வீ கப்பெண்மணிகள் (1081, 1082) என்பதற்கும் அணங்கு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

அணங்குகள் பொதுவில் துன்பம் செய்யக்கூடியவை என்று தமிழர்கள் நம்பியதால் தாக்கணங்கு என்ற சொல் பிரயோகத்தைப் பார்க்கிறோம்

தாக்கணங்கு (குறள்1081): ஐங்குறு-23; சிலப்.14-160;

மணி.3-57; கம்ப. மிதிலை 36)

இதோ ஒரு எடுத்துக் காட்டு:-

**முள்ளி வேரளைக் கள்வன் ஆட்டிப்**

**பூக்குற்று எய்திய புனலணி யூரன்**

**தேற்றம் செய்துநப் புணர்ந்தினித்**

**தாக்கணங்கு ஆவதென்கொல் அன்னாய்.**

தோழி! விளையாட்டு மகளிர், முள்ளிச் செடி வேரின் கீழ் வாழும் நண்டுகளைப் பிடித்து, நீராட்டி பூகளைக் கொண்டுவரும் ஊர்க்காரன், முன்னர் நம்மிடம் நயமாகப் பேசினான். இப்பொழுது தீண்டிவருத்தும் தெய்வமாக மாறியது எப்படியோ?

தாக்கணங்கு = தீண்டிவருத்தும் தெய்வம்

கிரேக்க நாட்டிலும் இதே போல நம்பிக்கைகள் நிலவியது குறிப்பிடத்தக்கது:

1.அவைகள் இயற்கைக் காட்சியுள்ள இடங்களில் வசிக்கும்

2. அழகான பெண் வடிவில் இருப்பர்

3.துன்பத்தைத் தருவர் என்பதில் ஒப்புமை இருக்கிறது. ஆங்கிலத்தில் Nymphs நிம்ப்ஸ் என்று சொல்வர்.

அணங்குகள் பற்றிய நம்பிக்கைகள் பாரதம் முழுதும் உண்டு. உலகப் புகழ்பெற்ற காளிதாசனின் காலம் சங்க கலத்துக்கும் முன் என்று நிரூபிக்க ஏற்கனவே 5,6 கட்டுரைகளை இதே பிளாக்–கில் கொடுத்தேன். அதில் முருகன் பற்றிய நம்பிக்கைகள் எப்படி இமயம் முதல் குமரி வரை ஒரே மாதிரியாக இருக்கிறது என்றும் காண்பித்தேன். ஆரிய ஸ்கந்தனும் தமிழ் முருகனும் பிற்காலத்தில் இணைந்துவிட்டார்கள் என்று பிதற்றியோருக்கு இது ஒரு அடி என்றும் குறிப்பிட்டேன். இதோ அந்த புறநானூற்றுப் பாடல்:

**“நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்**

**தண்ணடை மன்னர் தாருடைப் புரவி**

**அணங்குடை முருகன் தோட்டத்துக்**

**கலம்தொடா மகளிரின் இகழ்ந்து நின்றவ்வே”**

----------( புறப் பாடல் 299,பொன்முடியார்)

பொருள்: நெய்வார்த்து மிதித்த உணவை உண்ட, கத்தரிக்கப்பட்ட பிடரி மயிரை உடைய, கிண்கிணி அணிந்த குதிரைகள், அணங்குகள் இருக்கும் முருகன் கோவிலில் புழங்கும் கலங்களைத் தொடமுடியாமல் விலகி நிற்கும் பெண்களைப் போல போருக்கு அஞ்சிப் பின்னிட்டு நின்றன.

முருகன் கோவிலுக்குள் பெண்கள் போக அஞ்சுவதைக் காளிதாசனும் குறிப்பிடுவான். அங்கே அணங்குகள் இருப்பதால் அவை பெண்களை வருத்தும் என்று பெண்கள் அஞ்சினார்கள்.(காளிதாசனின் விக்ரம ஊர்வசீயம் நாடகம் -4 ஆவது காட்சி).

குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை என்ற சேர மன்னன் மீது பெருங்குன்றூர்க் கிழார் பாடிய பதிற்றுப் பத்து (ஒன்பதாம் பத்து ,வரி 88-6) பாடலில் காவல் மரமாகிய கடம்ப மரத்தில் அணங்கு இருப்பதைப் பாடுகிறார்:

**அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து**

பொருள்:தெய்வத் தன்மை உடைய காவல் மரமாகிய கடம்பின் பெரிய அடிமரத்தினை வெட்டியவன் என்று சேரன் புகழப்படுகிறான்.

பாண்டியன் மாறன் வழுதியைப் பாடிய மருதன் இளநாகனார் (புறம்.52)

**அணங்குடை நெடுங்கோட்டு அளையகம்**–என்பார்.

பொருள்:தெய்வத் தன்மை உடைய மலையில் உள்ள.

இந்த இரண்டு புறப்பாடல்களிலும் காவல் மரம், மலை ஆகியவற்றில் தெய்வத் தன்மை இருப்பதாகவும் அதை அணங்கு என்று கூறுவதையும் கண்டோம்.

எவ்வளவோ சான்றோர்கள் தடுத்தும் கேளாமல், பாண்டிய மன்னன் பூதப் பாண்டியன் இறந்தவுடன், இந்துப் பெண்கள் செய்யும் “சதி: என்னும் வழக்கத்தை மேற்கொண்டு அவனது மனைவி பெருங்கோப் பெண்டு தீப்பாய்ந்து உயிர்விட்டாள். ஆரிய-திராவிட வாதம் பேசிப் பிதற்றும் அறிவிலிகளுக்கு மஹாராணி பாடிய புறப் பாடல் 246 நல்ல அடி கொடுக்கும். அதற்கு அடுத்துவரும் பாடலில் அந்தக் காட்சியை நேரில் கண்டு பத்திரிக்கை நிருபர் போல  செய்தி தரும் புலவர் பேராலவாயார் கூறுவதைக் கேளுங்கள்:--

**மந்தி சீக்கும் அணங்குடை முன்றிலில்**

**நீர்வார் கூந்தல் இருபுறம் தாழ**...............

பொருள்:- அச்சத்துடைய தேவியின் கோயிலில் குரங்குகள் மான் கூட்டத்தைக் கலைக்கும்---------------

அதாவது பெருங்கோப்பெண்டு என்ற பெயர் உடைய மஹாராணி காளிகோயிலின் முன் மூட்டப்பட்ட தீயை வலம் வந்து கணவன் சடலம் எரியும் சிதையில் தீப்புகுந்தாள் என்பதை விளக்கும் பாடல் இது. அணங்குடை முன்றில் என்பது தெய்வீகஅச்சத்தை உண்டாகும் கோவில்.

பெரும்பாலும் ‘அச்சத்தை உண்டாக்கும்’ என்ற பொருளில் வந்தாலும் அந்த அச்சத்தை உண்டாக்கும் ஒரு சக்தி அங்கே உறைவதாக நம்பினர். அரசனின் முரசு முதலியவற்றுக்குப் பலி கொடுப்பதையும் புறம் பாடுகிறது.

மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி மருதன், ‘அ’ணங்குடை நல்லில்’ என்பார். தெய்வம் உறையும் இல்லங்கள்  என்பது இதன் பொருள்.

ஆக, ‘அச்சம் அல்லது வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய தெய்வீகசக்தி’ என்று சுருக்கமாகப் பொருள் சொல்லலாம். அது கோவில், மரங்கள், மலை, காடுகள் ஆகியவற்றில் இருப்பதாகப் புலவர்கள் பாடுகின்றனர். பேய்கள் பாற்றிய அவர்களுடைய நம்பிக்கைகளின் பிண்ணனியில் இதைப் பார்க்கவேண்டும்.

‘சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்’ என்ற நூல் 23 குறிப்புகளைத் தமிழ் நூல்களில் இருந்து பட்டியல் போட்டுள்ளது. தொல்காப்பிய சூத்திரம் 1202ல்----

**அணங்கே விலங்கே கள்வர் தம் இறைஎனப்**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே**

என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

பெண்கள் காமநோயால் வருந்தும்போது முருகன் அணங்கியதாக சந்தேகப்பட்டு, வேலனை அழைத்து வெறியாட்டு நடத்தி, அவ்வணங்கை விரட்ட முயல்வதுண்டு. ஒரு காதலி தன் தோழியிடம் தன் அம்மாவைக் கிண்டல் செய்யும் பாடலும் சங்க இலக்கியத்தில் உண்டு. “என் காதலன் பற்றி அறியாமல் அம்மா, வேலனைக் கூப்பிடப்போகிறாள்”-- என்று அவள் சிரித்துப் பகடி செய்கிறாள்!!

தெய்வம், தெய்வ மகளிர், தீண்டி வருத்தும் தெய்வம், மகளிர் மார்பில் உறையும் வீ ற்றுத்தெய்வம், இல்லில் உறையும் தெய்வம், நிலையில், யாழில், கடம்ப மரத்தில், யானையின் மத்தகத்தில், தந்தக் கட்டிலில், ஊருணித் துறையில், கடல் துறையில், நீராடும் துறையில், கடல் பரப்பில், சுறா மீனின் கொம்பில் (வருண வழி பாட்டுக்கு தமிழர் பயன்படுத்தியது), முருகன், தேவி கோவில்களில் அணங்கு இருப்பதாக தமிழர்கள் நம்பினர். ஒரே ஒரு இடத்தில் பேய் (பெரும்பாண் 459) என்ற பொருளிலும் வருகிறது. பேராசிரியர் தம் உறையில் பேய் எனப் பொருள் உண்டு என்றும் கூறுவர்.

**பேய்கள்**

பேய்களிடமிருந்து தப்பிக்க, சங்க காலத் தமிழர்கள் இரவம், வேம்பு இவைகளின் குழைகளை வீ ட்டில்செருகினர். வெண் கடுகுப் புகையை சாம்பிராணி போலப் போட்டனர். யாழ் முதலிய இசைக் கருவிகளால்

சப்தம் உண்டாக்கினர். ஆம்பற் குழலை ஊதி காஞ்சிப் பண்ணைப் பாடினர். தூபம் காட்டினர் (புறம். 281)

கண்ணுக்குப் புலப்படாத பேய்கள் உலவுவதாக நம்பினர் (புறம் 238)

**“வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்**

**பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும் காடு**” ---(புறம் 238)

இறந்த வீ ரர்களின்பிணங்களைத் தின்னும் பேய்கள் பற்றி புறநானூறு 373, 369, 62, பதிற்றுப்பத்து 13, 67 ஆகிய பாடல்களில் காணலாம். பரணி இலக்கியத்திலும், காரைக்கால் அம்மையார் பதிகங்களிலும் நிறைய செய்திகள் உள்ளன.

*எனது முந்தைய பேய், பூதம், பிசாசு யக்ஷன் பற்றிய கட்டுரைகள்:*

1.தமிழ்நாட்டை உலுக்கிய பேய் 2.யக்ஷப் பிரஸ்னம் பகுதி 1, 2, 3.

3.தமிழ் பூதமும் கிரேக்க பூதமும் 4.சிந்து சமவெளியில் பேய் முத்திரை

5.வள்ளுவன் சொன்ன பேய்க்கதை 6.பேய்கள் பற்றி பாரதி & விவேகானந்தர் 7.தமிழில் பூதம்! பேய்!! பிசாசு!!! 8. டெல்பி ஆரூடமும் குறிசொல்வோரும்.

இந்தக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

தமிழர்களின் சோதிட நம்பிக்கை பற்றிய கட்டுரைகளும் நிறைய உள்ளன.

Contact for more details:-- swami_48@yahoo.com